**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**

**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி.**

**MCOP. No.121/2015**

ம.சா.2 தேதி. 16.09.2025

| பெயர் | நந்தம் கார்த்திக் | த/பெ, | சுதாகர் |
|---|---|---|---|
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஜீனியர் ரெசிடென்ட் நியூரோ சர்ஜரி துறையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க authorisation letter வழங்கப்பட்டுள்ளது. எங்கள் மருத்துவமனைக்கு சாமுவேல் என்பவர் சிகிச்சைக்காக 22.09.2014 ம் தேதி சிகிச்சைக்காக வந்தார். 2 மாதங்களுக்கு முன்பு சாலை விபத்து ஏற்பட்டு கழுத்து பகுதியில் வலி இருப்பதாக கூறினார். கழுத்து வலிக்கு மருந்து மற்றும் காலர் அணிய அறிவுறுத்தினோம். பின்பு, 01.10.2014 ம் தேதி சிறுநீரக பிரச்சனைக்காக வந்தார். அது சம்பந்தமாக மருந்து கொடுத்தோம். 09.10.2014 ம் தேதி 2 மாதங்களாக தலைவலி கோளாறும், தலை பாரமாக இருப்பதாகவும், நடப்பதில் சிரமம் இருப்பதாகவும், முதுகில் காயம் ஏற்பட்டதாகவும் கூறி அதற்கு சிகிச்சை வழங்கப்பட்டது. பிறகு 13.10.2014 ம் தேதி கழுத்துவலி, தலை வலி இருப்பதாக கூறினார். அவருக்கு MRI scan எடுக்க பரிந்துரைத்தேன். 10.11.2014 ம் தேதி Scan எடுக்கப்பட்டு, அதில் அவருக்கு 70 வயதுக்கு மேல் பொதுவாக வரும் குறைபாடுகள் இருப்பதாக கூறினேன். மேலும், C3, C4 to C6, C7 disc bulge இருந்தது. C5, C6 ல் disc space குறைவாக காணப்பட்டது. அவரால் தனிப்பட்ட முறையில் நடக்க முடியும், ஆனால் அவருக்கு வலி இருக்கும். Cervical ல் இது போன்ற வீக்கம், எலும்பு தேய்வு மற்றும் குறுகியும் உள்ளது. MRI Scan **ம.சா. ஆ.24** ஆக (ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன குறைபாடுகள் CT Scan மற்றும் X-Ray தெரியாது என்றால் சரிதான். விபத்தின்போது கழுத்தில் ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக ஆரம்ப காலகட்டத்தில் மருந்து மற்றும் காலர் அணிந்து கொள்ள பரிந்துரை செய்து பிறகு அவருக்கு சரியாகாததால் பின்னர் MRI scan எடுக்கப்பட்டது. இந்த விபத்திற்கு முன்பு அவருக்கு எதுவும் இது போன்ற குறைபாடுகள் இருந்ததா என்று எந்த வித குறிப்பும் எங்கள் சிகிச்சை பதிவேட்டில் இல்லை என்றால் சரிதான்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு MLC case இல்லாத காரணத்தினால் எங்கள் மருத்துவமனையில் எந்த அசல் ஆவணமும் இருக்காது. இதன் அசல் ஆவணங்கள் நோயாளியிடம் தான்

உள்ளது. நான் சாட்சியம் அளிப்பது நீதிமன்றத்தின் மூலம் வந்த xerox ஆவணங்கள் அடிப்படையில்தான். நான் தற்போது மருத்துவமனை ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவில்லை. Xerox ஆவணங்கள் உண்மை தன்மை இல்லாமல் இருக்கலாம் என்றால், அதை பற்றி என்னால் கூற முடியாது. ம.சா.ஆ.2 ல் காதில் இரத்தம் வந்துள்ளது, வாந்தி வந்துள்ளது, நெற்றி மற்றும் முகத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுள்ளது. இதில் கழுத்தில் காயமோ, வலியோ குறிப்பிடப்படவில்லை. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் இது சாதாரண காயம் என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ல் fracture இல்லை சாதாரணமாக தான் உள்ளது. எங்கள் மருத்துவமனைக்கு கழுத்து வலி மற்றும் தலை வலிக்காக இரு முறை வந்துள்ளார். வெளிநோயாளியாக தான் 2 முறையும் சிகிச்சை பெற்றுள்ளார். சிறுநீரக தொந்தரவிற்காக ஒரு முறை எங்கள் மருத்துவமனைக்கு வந்துள்ளார். சிறுநீரக தொந்தரவு விபத்தின் மூலம் ஏற்பட்டது அல்ல என்றால் சரிதான். ம.சா.ஆ–24 ல் உள்ள குறைபாடுகள் அடிப்பட்டதனால் ஏற்பட்டது அல்ல. அடிப்பட்ட நபருக்கு விபத்தின் போது 80 வயது, வயோதிகத்தின் காரணமாக இந்த குறைபாடு என்றால் 100% உறுதியாக சொல்ல முடியாது. விபத்தின் காரணமாக disc bulge ஏற்படவில்லை என்றால் சரிதான். 2014 க்கு பிறகு எங்கள் மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ–19 ன் மூலம் நான் அறிந்து கொண்டது நோயாளிக்கு general weakness மற்றும் மலம் கழிப்பதில் குறைபாடு மற்றும் மயக்கம் என்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நான் தற்போது xerox ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளது உண்மை தன்மை இல்லை என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.